1972 மார்ச் 29]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(8) 1971–72-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கை மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1971–72-ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின்மீதான பொது விவாதமும், மானியக் கோரிக்கைகளின் மீதான வாக்கெடுப்பும் நடைபெற இருக்கிறது. இப்போது மணி 10-35. சரியாக ஒரு மணிக்கு விவாதம் முடிவுற்று 1 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறவேண்டும். ஒரு மணிக்குள் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் அளித்து முடிக்க வேண்டும். பல உறுப்பினர்கள், 15 பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். இரண்டரை மணி நேரம்தான் இருக்கிறது. துணை நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்கள் பற்றி மட்டும்தான் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேசுவதுபோல் அத்தனைக் காரியங்களைப் பற்றியும் கொள்கை பற்றியும் பேசுவது முறையாகாது. சில பேர்கள் பேசுவதற்கு பெயர் கொடுத்திருப்பதை, சிலர் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அரை மணி நேரமாவது பதில் அளிக்க வேண்டியிருக்கும். 1 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெறவேண்டியிருப்பதால் சுருக்கமாக முடித்துக்கொள்ளவேண்டும். சிலபேர்கள் விடுபட வேண்டி வரலாம். துணை மானியக் கோரிக்கைகள் பற்றி மட்டும் பேசுவது என்பதுதான் விதிமுறைகளுக்கு உட்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை நிதி அறிக்கையில் வேளாண்மை என்ற தலைப்பில் 107 லட்சம் ரூபாய் அதிகமாகக் கோரப்பட்டிருக்கிறது. அதில் தீவிர பருத்திச் சாகுபடித் திட்டத்திற்கு ரூ. 46 லட்சம் ரூபாய் வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. விவசாயத்தில் ஈடுபட்டு பாடுபடும் விவசாயிகள் சமீபத்தில் தமிழ்நாடு பூராவும், குறிப்பாக கோவில்பட்டி வட்டாரத்தில் மிகவும் நெருக்கடியான நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். நாலைந்து ஆண்டுகளாக அங்கு பருவ மழை அதிகமாக இல்லாததன் காரணமாக அவர்களுக்கு வரவேண்டிய வருமானம் சரியாக வராததால் ஏகப்பட்ட நஷ்டத்திற்கு அங்குள்ள விவசாய மக்கள் ஆளாகியிருக்கிறார்கள். பழைய பாக்கிகள்

முற்
10-